**சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்**

**அலகு பரீட்சை-02 (2021)**

**பரதநாட்டியம்** **தரம் -10**

**தயாரிப்பு :- செல்வி.R.புவிதா (கே/தெஹி/களனி த.வி)**

## பகுதி I

**01. அபிநயங்களை வெளிப்படுத்தாது அடவுகளை மட்டும் பிரயோகித்து ஆடப்படுவது.**

(i). நிருத்தம் (ii). நிருத்தியம் (iii). நாட்டியம் (iv). நாடகம்

**02. பாத்திர பகிப் பிராணன்களில் நட்டுவன் என குறிப்பிடப்படுபவர்.**

(i). நடன கலைஞர் (ii). நடன ஆசான் (iii). வாத்திய கலைஞர் (iv). அரங்க கலைஞர்

**03. "தாத்தா" என அன்புடன் அழைக்கப்பட்ட நாட்டிய கலைஞர்.**

(i). தஞ்சை வடிவேலு (ii). ஆடையாறு கே.லக்ஷ்மணன்

(iii). வழுவூர் இராமையாப்பிள்ளை (iv). பந்தணை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை

**04. ஸ்வரமாலை , ஸ்வரபல்லவா என அழைக்கப்படும் நடன உருப்படி.**

(i). அலாரிப்பு (ii). தில்லானா (iii). ஜதீஸ்வரம் (iv). வர்ணம்

**05. வடபாங்கு , தென்பாங்கு கூத்துக்கள் பயில் நிலையிலுள்ள பிரதேசம்**

(i). யாழ்ப்பாணம் (ii). மன்னார் (iii). முல்லைத்தீவு (iv). மலையகம்

**06. நாட்டிய கலைக்கான அபிநயம் எடுக்கப்பட்ட வேதம்.**

(i). அதர்வணம் (ii). சாமம் (iii). யசுர் (iv).இருக்கு

**07. நாட்டிய பயிற்சியின் போது பயன்படுத்தப்படும் உபகரணம்.**

(i). மிருதங்கம் (ii). தட்டுக்கழி (iii). தாளம் (iv). சல்லாரி

**08. மூங்கில் மரத்தினால் செய்யப்படும் இசைக்கருவி.**

(i). நாதஸ்வரம் (ii). யாழ் (iii). வயலின் (iv). புல்லாங்குழல்

**09. திரிபதாக முத்திரையை மட்டும் பயன்படுத்தி அபிநயிக்கப்படும் அடவு.**

(i). குதித்து மெட்டடவு (ii). பரவல் அடவு (iii). வீச்சடவு (iv). பாய்ச்சல் அடவு

**10. சிவபெருமான் ஆடிய தாண்டவங்களில் ஐந்தொழில்களையும் ஒரே உருவில் வெளிப்படுத்துவது.**

(i). ஆனந்தத் தாண்டவம் (ii). கௌரி தாண்டவம்

(iii). திரிபுர தாண்டவம் (iv). காளிகா தாண்டவம்

# பகுதி II

01. பாத்திரப் பிராணன்களில் குறிப்பிடப்படும் ”மேதா” என்றால் என்ன?
02. U என்ற குறியீட்டிற்குரிய தாள அங்கம் எது?
03. கிண்கிணியின் தெய்வம் எது?
04. மராட்டிய மன்னரின் ஆட்சியில் தஞ்சை பெருங்கோயில் எவ்வாறு அழைக்கப்பட்டது?
05. கூத்துக்கள் ஆடப்படும் அரங்கு எவ்வாறு அழைக்கப்பட்டது?